**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 322/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 6 |
| Name (திரு/திருமதி) | : நந்தினி |
| Father's Name/ Husband's Name | : செல்வம் |
| Village & Taluk | : செஞ்சி |
| Calling | : மருத்துவர் |
| Age | : 35 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.04.2026**

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது விழுப்புரம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.11.2017 ம் தேதியன்று செஞ்சி அரசு மருத்துவமனையில் அவசர பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது காலை 10.15 மணிக்கு திரு. ஹஜ்ராபி க.பெ. கவர்னர்பாட்ஷா என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவரை விசாரணை செய்ததில் தெரிந்த இரண்டு நபர்கள் அன்றைய தினம் காலை சுமார் 09.00 மணியளவில் அவரது வீட்டில் உள்ள சுவற்றில் தன்னை தள்ளி தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். பின்வரும் காயங்கள் காணப்பட்டன. 1. வலது தலையில் ரத்தக்கட்டு இருந்தது. 2. வலது மேல் கோரைப்பல் விழுந்து காணப்பட்டது. அவருக்கு தேவையான சிகிச்சை அளித்து அவரை மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன். அவர் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் மேல் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்பது அவரது மருத்துவ ஆவணங்களில் இருந்து தெரிய வந்தது. அவரது மருத்துவ ஆவணங்களை பரிசீலனை செய்ததில் அங்கு அவருக்கு CT Brain எடுக்கப்பட்டிருந்தது. அதில் அவரது வலது மூளையில் ரத்தக்கட்டு காணப்பட்டது. மேற்படி நபர் 01.11.2017 அன்று மேற்குறிப்பிட்ட

மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு 02.11.2017 அன்று அவர் Discharge செய்யப்பட்டுள்ளார் என்பது ஆவணங்கள் மூலம் தெரிய வந்தது. எனவே அவருக்கு ஏற்பட்ட 1வது காயம் கொடுங்காயம் என கருத்து கூறி சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தார்கள்.

நீதிமன்ற கேள்வி – காயம் 2 எந்த வகையான காயம் என்றால்?

பதில் – அதுவும் கொடுங்காயம் தான்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. காயடைந்த நபர் செங்குத்தான படியில் ஏறும்போது தவறி கீழே விழும்பட்சத்தில் அவருக்கு காயச்சான்றில் குறிப்பிட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான். காயமடைந்த நபருக்கு நான் முழுமையான சிகிச்சை அளிக்கவில்லை என்றால் முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன். காயமடைந்த நபரின் மருத்துவ ஆவணங்களை புலன் விசாரணை அதிகாரியிடம் அளித்தேனா என்றால் ஆவணங்களை காவலர்கள் தான் என்னிடம் பரிசீலனைக்காக கொடுத்தார்கள் அதனை பார்த்து அதன் அடிப்படையில் காயச்சான்று வழங்கிவிட்டு அதனை காவலர்களிடமே ஒப்படைத்துவிட்டேன்.

2. காயமடைந்த நபரின் மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் காயச்சான்று வழங்கி அதன் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். காயமடைந்த நபர் 01.11.2017 அன்றே செஞ்சி அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டார் என்றால் சரிதான். காயச்சான்றில் Date of Discharge என்பதில் 03.11.2017 என குறிப்பிட்டு அதனை 02.11.2017 என மாற்றம் செய்துள்ளேன் என்றால் தெரியாமல் எழுதிவிட்ட காரணத்தினால் அதனை மாற்றி எழுதினேன். நான் சொல்வது போல் 02.11.2017 அன்று காயமடைந்த நபர் Discharge ஆகவில்லை என்றாலும், 03.11.2017 அன்று தான் Discharge ஆகியுள்ளார் என்றாலும் சரியல்ல. காயமடைந்த நபர் Discharge

ஆவதற்கு முன்னரே நான் காயச்சான்றினை தயார் செய்து கொடுத்துவிட்டேன் என்றாலும் அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. காயமடைந்த நபருக்கு நான் சிகிச்சை அளிக்காத காரணத்தினால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, அவரது மருத்துவ ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எனக்கு அதன் விவரங்கள் தெரிய வந்தது. காவலர்கள் என்னை இவ்வழக்கு தொடர்பாக விசாரித்தனர் என்றால் சரிதான். காவலர்கள் விசாரணயின்போது காயடைந்த நபர் 01.11.2017 இரவு 10.15 மணிக்கு சிகிச்சைக்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, காலை 10.15 மணிக்கு சிகிச்சைக்கு வந்ததாகத்தான் நான் அவரிடம் கூறினேன்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B. Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.